நாணயச் சபை

**இலங்கை மத்திய வங்கி**

2020 பெப்புருவரி 14 | நிதி வியாபாரச் சட்டப் பணிப்புரைகள் | 2020இன் 01ஆம் இலக்கம்

---

## கொடுகடன் வசதிகளை வகைப்படுத்தல் மற்றும் அளவிடல்

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் நியதிகளுக்கமைவாக, நாணயச் சபை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தலையும் அளவு முறைகளையும் இத்தால் பின்வருமாறு தீர்மானிக்கிறது;

1. பணிப்புரையின் ஏற்புடைத்தன்மை

1.1 இப்பணிப்புரைகள், இலங்கை கணக்கீட்டு நியமம், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: இலங்கை பட்டயக் கணக்காளர் சபையினால் விடுவிக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் முன்மதியுடைய தேவைப்பாடுகள் என்பனவற்றினைப் பின்பற்றுகின்ற விதத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றினால் வழங்கப்பட்ட அனைத்து கொடுகடன் வசதிகளினதும் வகைப்படுத்தல் மற்றும் அளவிடல் தொடர்பான குறைந்தபட்ச தேவைப்பாடுகளை எடுத்துக்காட்டுகின்றன.

1.2 கொடுகடன் வசதிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்;

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 9 இற்கிணங்க கடன் தீர்ப்பனவுச் செலவில் அளவிடப்பட்ட அனைத்து நிதியியல் சாதனங்கள்

(ஆ) உத்தரவாதங்கள், முறிகள், நியதி உத்தரவாதங்கள், நாணயக்கடிதம் மற்றும் ஏற்பாவணங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய எதிர்பாரா பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கான கட்டுப்பாடுகளுடன் கூடிய ஐந்தொகைக்கு வெளியேயான கொடுகடன் வசதிகள்.

1.3 அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் கடன்பாட்டாளர் தரத்தினை மதிப்பீடு செய்யும் நோக்கத்தினை இயலுமைப்படுத்துவதற்காக கடன்பாட்டாளர் கொடுகடன் வசதி மற்றும் காலாந்தர கொடுகடன் மீளாய்வுகள் தொடர்பான அடிப்படைத் தகவல்களை (ஏற்புடைத்தானவிடத்து பின்னிணைப்பு "அ" இல் காட்டப்பட்டுள்ளவை உட்பட) பேணுதல் வேண்டும்.

2. நடைமுறைக்கு வரும் நாள்

2.1 இப்பணிப்புரைகள் 2021 ஏப்பிறல் 01ஆம் நாளன்றோ அதற்குப் பின்னரோ தொடங்கும் நிதியியல் ஆண்டில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

3. பணிப்பாளர் சபை மற்றும் மூத்த முகாமைத்துவத்தினரின் பொறுப்பாண்மை

3.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றின் பணிப்பாளர் சபையும் மூத்த முகாமைத்துவமும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் சபை ஒப்புதலளித்த கொள்கைகள், ஏற்புடைத்தான கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் என்பனவற்றிற்கிணங்க, போதுமான பெறுமதியிழப்புப் படிகளை தொடர்ச்சியாக தீர்மானிப்பதற்காக, காத்திரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை உட்பட, கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை நிறுவுவதற்கு பொறுப்புடையனவாகும்.

4. கொடுகடன் வசதிகளை வகைப்படுத்தல்

4.1 கொடுகடன் வசதிகள்

4.1.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று, கொடுகடன் வசதிகளை பணிப்புரை 4.1.2 மற்றும் 4.1.3 என்பனவற்றின் நியதிகளில் செயற்படுகின்ற கடன்கள், மற்றும் செயற்படாக் கடன்கள் என வகைப்படுத்த முடியும்.

4.1.2 செயற்படுகின்ற கடன்கள் என்பது பணிப்புரை 4.1.4 இன் நியதிகளில் வகைப்படுத்தப்பட்ட செயற்படாக் கடன்கள் தவிர்ந்த அனைத்து கொடுகடன் வசதிகள் எனப் பொருள்படும்.

4.1.3 உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று இரண்டு பிரமாணங்களின் அடிப்படையில் அதாவது காலம் அத்துடன்/ அல்லது சாத்தியமான இடர்நேர்வு என்பனவற்றின் அடிப்படையில் கொடுகடன் வசதிகளை செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தலாம்.

4.1.4 உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று குறைந்தபட்சம் காலம் அத்துடன்/ அல்லது சாத்தியமான இடர்நேர்வு என்பனவற்றின் அடிப்படையில், வகைப்படுத்தும் கொடுகடன் வசதிகள் புள்ளிவிபரப் பின்னிணைப்பு "ஆ" இன் அட்டவணை 1 மற்றும் 2 இல் தரப்படுகின்றன.

4.2 **மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுகடன் வசதிகள்**

4.2.1 மீள் அட்டவணைப்படுத்தும் பொழுது, வகைப்படுத்தும் நோக்கத்திற்காக, மீள் அட்டவணைப்படுத்தலுக்கு முன்பும் மீள் அட்டவணைப்படுத்தலுக்கு பின்பும் கொடுகடன் வசதி நிலுவையில் இருந்த காலப்பகுதி கூட்டாக பரிசீலனையில் கொள்ளப்படுதல் வேண்டும்.

4.2.2 கொடுகடன் வசதி செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்படுவதற்கு முன்னதாக மீள் அட்டவணைப்படுத்தல் நிகழும்பொழுது, விசேடமாக குறிப்பிடப்பட்ட வகைக்கு ஏற்புடைத்தான, புள்ளிவிபரப் பின்னிணைப்பு ஆ இன் அட்டவணை 3இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்காக கடன்பாட்டாளர் கடனை தொடர்ச்சியாக தீர்ப்பனவு செய்து வருவாராயின் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கொடுகடன் வசதி நிலுவையில் இருந்த காலப்பகுதியின் கூட்டுத்தொகை பற்றி கருத்திற்கொள்ளத் தேவையில்லை.

4.2.3 கொடுகடன் வசதிகள் செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்பட்டதன் பின்னர் மீள் அட்டவணைப்படுத்தல் நிகழும்பொழுது, மீள் அட்டவணைப்படுத்தலுக்கு முன்பும் மீள் அட்டவணைப்படுத்தலுக்கு பின்பும் கொடுகடன் வசதி நிலுவையிலிருந்த காலப்பகுதி தொடர்பான கொடுகடன் வசதிகள் தொடர்பில் பின்னிணைப்பு "ஆ" இன் அட்டவணை 1 இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியை விஞ்சுமிடத்து மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுகடன் வசதி செயற்படாக் கடனாக வகைப்படுத்தப்படல் வேண்டும்.

4.3 **கொடுகடன் வசதிகளை மீள்வகைப்படுத்தல்**

4.3.1 **செயற்படாக் கடன்களை செயற்படும் கடன்களாக மீள் வகைப்படுத்தல்**

செயற்படாக் கடன்கள் பின்வரும் பிரமாணங்களை பூர்த்திசெய்யுமாயின் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் அத்தகைய செயற்படாக் கடன்களை செயற்படும் கடன்களாக மீள் வகைப்படுத்தலாம்;

(i) செயற்படாக் கடன்களாக வகைப்படுத்தப்பட்டவை தொடர்பில் நிலுவையில் இருந்த முதல் தொகையினையும் வட்டியையும் கடன்பாட்டாளர் முழுமையாக செலுத்தியிருக்குமிடத்து அல்லது சாத்தியமான இடர்நேர்வின் கீழ் செயற்படாக்கடனாக வகைப்படுத்தப்பட்ட கொடுகடன் வசதிகளில் திருப்திகரமான செயலாற்றம் உறுதிப்படுத்தப்படுவதனைத் தொடர்ந்து, அத்துடன் எஞ்சிய முதல் தொகையும் வட்டியும் கடன்பாட்டாளர் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கிணங்க மீளச் செலுத்தப்படும் என்பதனை உறுதிப்படுத்திய பின்னர்.

(ii) கடன்பாட்டாளர் மீள்கொடுப்பனவு இயலாற்றல், காசுப் பாய்ச்சல் மற்றும் நிதியியல் நிலைமை என்பனவற்றின் கொடுகடன் மதிப்பீடு, கீழேயுள்ள பணிப்புரை 5 இற்கு இசைவாக, செயற்படாக் கடன்கள் செயற்படும் கடன்களாக மீள் வகைப்படுத்தலுக்கு முன்னதாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

4.3.2 **மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட செயற்படாக் கடன்களை செயற்படும் கடனாக மீள வகைப்படுத்தல்.**

(i) கடன்பாட்டாளர் மீள் அட்டவணைப்படுத்தல் நியதிகளுக்கு முழுமையாக இணங்கியிருக்குமிடத்தும் எதிர்காலத்தில் மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ், மீளச்செலுத்துவதற்கான இயலாற்றலைக் கொண்டிருக்கின்றார் என்பதனை எடுத்துக்காட்டுமிடத்தும் மாத்திரமே உரிமம்பெற்ற நிதிக் கம்பனி மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட கொடுகடன் வசதிகளை செயற்படும் கடன்களாக மீள் வகைப்படுத்தல் வேண்டும்.

(ii) மீள் அட்டவணைப்படுத்தலுக்கு உட்பட்டிருக்கும் செயற்படாக் கடன்கள், திருப்திகரமான செயற்பாட்டினை கொண்டிருக்கின்றன எனவும் கொடுகடன் வசதிகள் தொடர்பான பின்னிணைப்பு "அ" இன் அட்டவணை 3இல் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கு உட்பட்டனவாகவும் இருக்கின்றன என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மாத்திரமே செயற்படும் கடன்களாக தரமுயர்த்தப்படுவதற்கு தகைமையுடையனவாக இருக்கும்.

4.4 **பல்பெருக்க கொடுகடன் வசதிகள்**

உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று கடன்பாட்டாளரின் கொடுகடன் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு கொடுகடன் வசதிகளை வகைப்படுத்த வேண்டும்.

4.5 **புதிய கொடுகடன் வசதிகள்**

கொடுகடன் வசதியொன்று செயற்படாக் கடனாக வகைப்படுத்தப்பட்டு செயற்படா கொடுகடன் வசதிகளின் (அட்டவணை 1 பின்னிணைப்பு ஆ) வகைப்படுத்தலின் படி மீளச்செலுத்தப்பட்ட கொடுகடன் வசதியின் அதே வகைக்குள் வகைப்படுத்தப்பட்டிருந்தாலொழிய, உரிமம்பெற்ற நிதிக் கம்பனி செயற்படாக் கடன்களின் மீள்கொடுப்பனவிற்காக அதே கடன்பாட்டாளரின் பெயரிலோ அல்லது வேறு எவரேனும் தொடர்பான தரப்பினருக்கோ புதிய கடன் வசதிகளெதனையும் வழங்கக்கூடாது. அத்தகைய செயற்படாக் கடன்களை செயற்படும் கடன்களாக மீள வகைப்படுத்தப்படுவது பணிப்புரை 4.3 இற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| 5. செயற்படாக் கொடுகடன் வசதிகளை வகைப்படுத்தல் | 5.1 | உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று கொடுகடன் வசதிகளை பின்னிணைப்பு "ஆ" இன் அட்டவணை 1இல் தரப்பட்டுள்ளவாறு குறைந்தபட்சம் விசேடமாக குறிப்பிடக்கூடியது, குறைந்த தரம், ஐயத்திற்குரியது மற்றும் இழப்பிற்குரியது என நான்கு வகைகளாகப் பிரித்தல் வேண்டும். |
| 6. எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கான அளவு முறை | 6.1 | உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று, பின்னிணைப்பு "இ" இல் காட்டப்பட்டவாறு, இலங்கை கணக்கீட்டு நியமம், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: நிதியியல் சாதனங்களிற்கிணங்க, அனைத்து கொடுகடன் வசதிகளுக்குமாக எதிர்பார்க்கப்படும் இழப்புக்களுக்கான இழப்பு படிகளை அங்கீகரித்தல் வேண்டும். |
| | 6.2 | **பல்பெருக்க கொடுகடன் வசதிகள்** |
| | | 6.2.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று ஒரேவிதமான கொடுகடன் வெளிப்பாய்ச்சல்கள் தவிர (வீடமைப்புக் கடன்கள், நுகர்வோர் கடன்கள், பெறத்தக்க கொடுகடன் அட்டைகள்), குறிப்பிட்டதொரு பொருண்மிய மட்டத்திற்கு கீழே கடன்பாட்டாளரின் கொடுகடன் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட பொருண்மிய மட்டத்திற்கு மேலாக கொடுகடன் வசதிகளை வழங்கலாம். |
| | | 6.2.2 உரிமம்பெற்ற நிதியியல் கம்பனியொன்று மேலேயுள்ளவை (6.2.1) தவிர மற்றைய அனைத்து ஒரேவிதமான கொடுகடன் வெளிப்படுத்துகைகளையும் ஒன்றுசேர்த்து இடர்நேர்வு பண்புகள் தொடர்பில் ஒன்று சேர்க்கப்பட்ட அடிப்படையொன்றினை வழங்குதல் வேண்டும். |
| | | 6.2.3 மேலே குறிப்பிடப்பட்ட 6.2.1 மற்றும் 6.2.2 இரண்டும் இணைந்திருக்குமிடத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று உள்ளகத் தரமிடல் ஒன்றினை உருவாக்க வேண்டும் என்பதுடன் கடன்பாட்டாளரின் கொடுகடன் மதிப்பீடு தொடர்பில் அடிப்படையொன்றினை வழங்குதலும் வேண்டும். |
| 7. ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடு | 7.1 | **ஒழுங்குமுறைப்படுத்தல் இழப்புப் படியின் குறைந்தபட்ச மட்டம்.** |
| | | 7.1.1 கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க இப்பணிப்புரையின் அதிகார வரம்பின்கீழ், காலத்திற்குக் காலம் கடன் தீர்ப்பனவு செலவில் அளவிடப்பட்ட அனைத்து நிதியியல் சாதனங்களுக்குமான கொடுகடன் வசதிகளுக்கான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் ஒதுக்கு (அதாவது செயற்படாக் கடன்களிலுள்ள ஒதுக்கம் மற்றும் ஒன்றுசேர்ந்த வட்டி) என்பனவற்றிற்கிடையிலான வேறுபாடு கணிசமானதாக இருக்குமாயின், பணிப்பாளர் ஒழுங்குமுறைப்படுத்தல் இழப்புப் படியின் குறைந்தபட்ச மட்டத்தினை தீர்மானிக்க முடியும். |
| | | 7.1.2 உரிமம்பெற்ற நிதிக் கம்பனியானது, கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாடுகளுடன் இணங்கிச்செல்கின்ற விதத்தில் கொடுகடன் வெளிப்படுத்துகைகள் தொடர்பில் எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்களுக்காக இழப்புப் படிகளை தீர்மானித்து அங்கீகரித்தல் வேண்டும். எனினும், பன்னாட்டுச் சிறந்த நடைமுறைகளுடன் இணங்கிச்செல்லும் விதத்தில், இலங்கை மத்திய வங்கி, ஒழுங்குமுறைப்படுத்தல் ஏற்பாடுகளுடன் ஒப்பிடுகையில் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களுக்கான படிகளைக் கண்காணித்தல் வேண்டும். |

7.1.3 எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பிற்கான இழப்புப்படிகள் ஒழுங்குமுறைப்படுத்தல் ஏற்பாடுகளுக்குக் கீழே வீழ்ச்சியடையுமிடத்து, உரிமம்பெற்ற நிதிக் கம்பனி, அது பிடித்துவைக்கப்பட்ட ஒதுக்கீடு ஒன்றினூடாக பகிர்ந்தளிக்கப்படாத ஒழுங்குமுறைப்படுத்தல் இழப்புப் படிகளின் ஒதுக்கில் மேலதிக இழப்புப் படியொன்றினைப் பேணுதல் வேண்டும். மேலதிக இழப்புப்படியானது எல்லா நேரங்களிலும் ஒழுங்குமுறைப்படுத்தல் இழப்பு படி ஒதுக்கில் பேணப்படல் வேண்டும். எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புக்களுக்கான இழப்புப்படிகள் ஒழுங்கு முறைப்படுத்தல் ஏற்பாடுகளை விஞ்சுகின்ற போது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியானது ஒழுங்குமுறைப்படுத்தல் இழப்புப்படி ஒதுக்கிலுள்ள மிகையான நிதியத்தினை அதன் பிடித்துவைக்கப்பட்ட வருவாய்களுக்கு மாற்றல் வேண்டும்.

7.1.4 மேலும், ஒழுங்குமுறைப்படுத்தல் ஒதுக்கில் காணப்படும் ஏதேனும் பற்றாக்குறை (அதாவது ஒதுக்கு மற்றும் செயற்படாக் கடனிலுள்ள ஒன்றுசேர்ந்த வட்டி) மற்றும் கணக்கீட்டு நியமங்களின்படி எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பிற்கான இழப்புப்படி என்பன, 2018ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதி வியாபாரச் சட்டப் பணிப்புரை - மூலதன போதுமைத் தேவைப்பாடுகள் அல்லது திருத்தப்பட்டவாறான விதத்தில் சீராக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

7.1.5 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கீழேயுள்ள பணிப்புரை 7.2 இற்கு இணங்க, இலங்கை மத்திய வங்கிக்கான நியதிச் சட்ட ரீதியான ஒதுக்கினை அடிப்படையாகக் கொண்டு கட்டாய அடிப்படையில் ஒழுங்குமுறைப்படுத்தல் ஏற்பாடுகள் தொடர்பில் அனைத்து காலாண்டு தகவல்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

7.1.6 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், இலங்கை கணக்கீட்டு நியமம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ஒதுக்கு ஏற்பாடுகளின் கீழ், கீழேயுள்ள பணிப்புரை 7.2 இற்கிணங்க, அடையாளம் காண்பதற்கும் மீளிணக்கப்படுவதற்கும் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களை அறிக்கையிடுவதற்கும் போதுமான தரவு/ பதிவேடுகள் மற்றும் முறைமைகளை தனித்தனியாக பேணுதல் வேண்டும்.

7.2 **ஒழுங்குமுறைப்படுத்தல் ஒதுக்குகளை மேற்கொள்ளல்**

7.2.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று, வெளிநின்ற தொகையின் அடிப்படையில் பின்னிணைப்பு "ஆ" இன் அட்டவணை 1 மற்றும் 2இல் வகைப்படுத்தப்பட்ட கொடுகடன் வசதிகளின்படி குறித்துரைக்கப்பட்ட ஒதுக்குகளையும் பின்னிணைப்பு "இ" இல் குறித்துரைக்கப்பட்டவாறு பிணையுறுதிகளின் தேறல் செய்யப்படத்தக்க பிணையப் பெறுமதி நீங்கலாக, பணிப்புரை 7.3இல் குறித்துரைக்கப்பட்ட செயற்படாக் கடன் மீதான ஒன்றுசேர்ந்த வட்டியையும் பின்வரும் விதத்தில் பேணுதல் வேண்டும்:

| செயற்படா கொடுகடன் வசதிகளின் வகைகள் | குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச ஒதுக்குகளின் தேவைப்பாடு |
|---|---|
| விசேடமாகக் குறிப்பிடத்தக்கது | 5% |
| தரம் குறைந்தது | 20% |
| ஐயத்திற்குரியது | 50% |
| இழப்பிற்குரியது | 100% |

7.2.2 தொடர்பான வகைகளின் மீள் அட்டவணையிடப்பட்ட செயற்படாக் கடன்கள் தொடர்பில் முன்னர் செய்யப்பட்ட குறிப்பிட்ட ஒதுக்கத்தின் தொகையினை பின்னிணைப்பு "ஆ" இன் அட்டவணை 3இல் குறித்துரைக்கப்பட்ட காலத்தின் பின்னர் மாத்திரம் மாற்றியமைக்க முடியும்.

7.2.3 உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று கடன்பாட்டாளரின் கொடுகடன் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு பல்பெருக்க கொடுகடன் வசதிகளை வழங்குதல் வேண்டும்.

7.3 **செயற்படாக் கடன்கள் மீதான ஒன்றுசேர்ந்த வட்டி**

கட்டாய அடிப்படையில், உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று ஒன்றுசேர்ந்த வட்டியை அறிக்கையிடலாமெனினும் கொடுகடன் வசதி செயற்படாக் கடனாக வகைப்படுத்தப்பட்ட நாளிலிருந்து சேகரிக்க முடியாது.

7.4 **செயற்படா கொடுகடன் வசதிகளை பதிவழித்தல்/ பதிதல்**

உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்று பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட நன்கு வடிவமைக்கப்பட்ட பதிவழித்தல்/ பதிதல் கொள்கையொன்றினைக் கொண்டிருந்தல் வேண்டும்.

8. இடைக்கால ஏற்பாடுகள்

8.1 விசேடமாக குறிப்பிடப்படும் வகைக்கான வகைப்படுத்தல் தொடர்பில் இடைக்கால ஏற்பாடொன்றாக, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் 12 மாதங்களுக்காக 2021.04.01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் 120 நிலுவை திகதியொன்றைப் பின்பற்ற வேண்டும் என்பதுடன் 2022.04.01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வகைப்படுத்தலுக்காக 90 நிலுவைத் திகதியையும் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

9. வரைவிலக்கணம்

9.1 "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் என பொருள் கோடப்படல் வேண்டும்.

10. முன்னைய பணிப்புரையை இரத்துச் செய்தல்

10.1 2006ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அறவிடமுடியாத மற்றும் ஐயக்கடன் ஏற்பாடுகள்) பணிப்புரை மற்றும் 1991ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (ஒன்றுசேர்ந்த வட்டி) பணிப்புரை என்பன இப்பணிப்புரை நடைமுறைக்குவரும் நாளிலிருந்து இரத்துச்செய்யப்படுதல் வேண்டும்.

**பேராசிரியர். டபிள்யு. டி. லக்ஷ்மன்**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

## கொடுகடன் கோப்புக்களில் பேணப்படவேண்டிய குறைந்தபட்ச தகவல்கள்

(I) **கடன்பாட்டாளர் தொடர்பான தகவல்கள்**

(i) இயற்கையான ஆட்கள் - தொழில், தொழில்தருநர், சம்பளம்/ வருமானம், நிதியியல் நிலைமை/ நிகரப் பெறுமதி மற்றும் வேறுஏதேனும் தொடர்பான தகவல்கள்.

(ii) ஏனையவை - யாப்பு (சொத்துரிமை, பங்குடமை, தனியார் கம்பனி, பகிரங்க கம்பனி, சங்கம், களரி, கூட்டுறவுச் சங்கம், நியதிச் சபைகள்) வியாபாரப் பின்னணி மற்றும் வரலாறு, நிறுவன ரீதியான அமைப்பு முகாமைத்துக் குழு/ பணிப்பாளர், பங்குடமையாளர்கள்/ உரிமையாளர்/ பங்காளர்கள் நிதியியல் நிலைமை மற்றும் செயலாற்றம் அத்துடன் வேறுஏதேனும் தொடர்பான தகவல்கள்.

(II) **கொடுகடன் வசதி தொடர்பான தகவல்கள்**

(i) வசதி வகையின் விபரணம்.

(ii) வசதியின் நோக்கம்.

(iii) வசதியின் காலம் - வரையறைகள், வட்டி வீதங்கள், மீள்கொடுப்பனவு அட்டவணைகள், காலாவதியாகும் திகதிகள்.

(iv) பிணையுறுதிகளின் வகைகள், மதிப்பீட்டுத் தொகை, மதிப்பீட்டுத் திகதி மற்றும் ஏற்புடைத்தானவிடத்து, மதிப்பீட்டாளரின் பெயர்.

(v) உத்தரவாதிகள் - பெயர்கள், நிதியியல் நிலைமை மற்றும் நிகரப்பெறுமதி.

(vi) கடன் வழங்கப்பட்ட வியாபாரத் துறை (அதாவது வேளாண்மை, தயாரிப்பு, சில்லறை வர்த்தகம் போன்றவை).

(III) **கொடுகடன் விண்ணப்பத்தினை மதிப்பிடுவது தொடர்பான தகவல்**

(குறிப்பிட்ட தகவல்களை இயற்கையான ஆட்களாகவுள்ள கடன்பாட்டாளர்களுக்கு பிரயோகிக்க முடியாமலிருக்கும்)

(i) கணக்கு அலுவலர்/ முகாமையாளர் பேரிலான மதிப்பீடு மற்றும் விதந்துரைப்புக்கள்.

(ii) முகாமைத்துவ/ கொடுகடன் குழுவின் ஒப்புதல் மற்றும் ஒப்புதலுக்கான அடிப்படை.

(iii) பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட தரம்சார் பகுப்பாய்வுகள்.

அ. கடன்பாட்டாளர்கள் தகவல்கள்.

ஆ. வாடிக்கையாளருடனான உறவு முறையின் வரலாறு.

இ. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுடனான கடன்பாட்டாளரின் தொடர்பான ஏனைய குழுமத்தினரின் நிதிக் கம்பனி தொடர்புகள் மீதான தகவல்கள்.

ஈ. உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் தொடர்பான அலுவலர்கள் உட்பட ஏனைய நிறுவனங்கள் மற்றும் மூலங்களிலிருந்து கடன்பாட்டாளர் தொடர்பாக பெறப்பட்ட தகவல்கள்.

உ. கைத்தொழில் மற்றும் வியாபார இடர்நேர்வுகளின் பகுப்பாய்வு.

ஊ. தனியொரு வாடிக்கையாளரில் கவனம்செலுத்துதல் (பொருத்தமானதாயின்).

(iv) பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட கணியம்சார் பகுப்பாய்வுகள்.

அ. நிதியியல் நிலைமை மற்றும் செயலாற்றம் (முன்னையவை, தற்போதையவை மற்றும் எறிவு செய்யப்பட்டவை).

ஆ. மீள்கொடுப்பனவுத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான வியாபாரத் திட்டங்கள், மூலங்கள் மற்றும் காசுப்பாய்ச்சல் எதிர்வுகூறல்கள்.

(v) மூலதன மூலவளங்கள்.

(vi) மற்றைய கடப்பாடுகள்.

(vii) பிணையுறுதிகளின் மதிப்பிடல் மற்றும் மதிப்பீடு.

(IV) **காலாந்தர கொடுகடன் மீளாய்வு தொடர்பான தகவல்கள்**

(சில தகவல்கள் இயற்கையான ஆட்களாக விளங்கும் கடன்பாட்டாளர்களுக்கு ஏற்புடைத்தானதாக இருக்கமாட்டாது)

(i) கொடுகடன் மீளாய்வு அலுவலரின் மதிப்பீடு மற்றும் விதந்துரைப்புக்கள். பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

அ. வழங்கப்பட்ட கொடுகடன் தரம்/ தரமிடல்.

ஆ. இழப்புக்களுக்கான ஒதுக்கு.

இ. வட்டியின் இடை நிறுத்தல்.

(ii) புதுப்பித்தலுக்கான ஒப்புதல் மற்றும் ஒப்புதலுக்கான அடிப்படை; நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் திருத்தம்; மற்றும் கொடுகடன் தரமிடலில் மாற்றங்கள்.

(iii) பின்வருவன தொடர்பில் கிடைக்கத்தக்க பிந்திய தகவல்கள்.

அ. எதிர்பாராத பொறுப்புக்கள், கடப்பாடுகள், மற்றும் ஏனைய ஐந்தொகைக்கு வெளியேயான கொடுக்கல்வாங்கல்கள் உட்பட பயன்படுத்தப்பட்ட வெளிநின்ற வசதிகள்.

ஆ. கணக்குகளின் நடத்தை மற்றும் தீர்ப்பனவுகள்.

இ. கடன்பாட்டாளருடனான கடிதத்தொடர்புகள் மற்றும் கூட்டங்கள் மற்றும் கள விஜயங்களிலிருந்து கோரப்பட்ட அறிக்கைகள்.

ஈ. கிடைக்கத்தக்கதாக இருக்குமிடத்து, உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்களிடமிருந்தான மீளாய்வுக் கருத்துக்கள் உட்பட கடன்பாட்டாளர் தொடர்பான பிந்திய இற்றைப்படுத்தப்பட்ட நிதியியல் தகவல்களை அடிப்படையாகக் கொண்ட நடப்பு கணியம்சார் பகுப்பாய்வுகள்.

(iv) பிந்திய இற்றைப்படுத்தப்பட்ட நிதியியல் தகவல்கள், மதிப்பீடுகள், கணிப்புக்கள் மற்றும் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்ட நடப்பு கணியம்சார் பகுப்பாய்வுகள்.

(v) கடன்பாட்டாளரின் ஏனைய தொடர்பான குழுமங்களின் நடத்தையின் பேரிலான தகவல்கள்.

(vi) கைத்தொழில் மற்றும் வியாபார இடர்நேர்வுகளின் பகுப்பாய்வுகள்.

(vii) இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்திலிருந்து பெறப்பட்ட கொடுகடன் அறிக்கையின் மதிப்பீடு.

அட்டவணை 1: செயற்படாக் கடன்கள் - காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டது.

| | | செயற்படாக் கடன்களின் வகைப்படுத்தல் | | | |
|---|---|---|---|---|---|
| வசதியின் வகை | வகைப்படுத்தல் பிரமாணம் | விசேடமாக குறிப்பிடப்பட்ட வகை | குறைந்த தர வகை | ஐயத்திற்குரிய வகை | இழப்பு வகை |
| நாளாந்த அடிப்படையில் மீளச் செலுத்தப்படத்தக்க கொடுகடன் வசதிகள் | செலுத்தவேண்டிய திகதியிலிருந்து 7 நாட்களுக்கும் கூடுதலாக நிலுவையிலுள்ள முதல் அல்லது வட்டி அல்லது இரண்டும் | செலுத்தவேண்டிய திகதியிலிருந்து 7 நாட்களுக்கு கூடுதலாக ஆனால் 30 நாட்களுக்கு குறைவாக அல்லது சமமாக நிலுவையிலுள்ள கொடுப்பனவு | செலுத்தவேண்டிய திகதியிலிருந்து 30 நாட்களுக்கு கூடுதலாக ஆனால் 60 நாட்களுக்கு குறைவாக அல்லது சமமான நாட்களுக்கு நிலுவையிலுள்ள கொடுப்பனவு | செலுத்தவேண்டிய திகதியிலிருந்து 60 நாட்களுக்கு கூடுதலாக அல்லது 90 நாட்களுக்கு குறைவாக அல்லது சமமான நாட்களுக்கு செலுத்தப்படாது நிலுவையிலுள்ள கொடுப்பனவு | செலுத்தப்படவேண்டிய திகதியிலிருந்து 90 நாட்களுக்கு கூடுதலாக செலுத்தப்படாது நிலுவையிலுள்ள கொடுப்பனவு |
| வாராந்த அல்லது இரு வாரங்களுக்குகொரு தடவை மீளச் செலுத்தப்படத்தக்க கொடுகடன் வசதி | செலுத்தவேண்டிய திகதியிலிருந்து 30 நாட்களுக்கு கூடுதலாக நிலுவையிலுள்ள முதல் அல்லது வட்டி அல்லது இரண்டும் | செலுத்தவேண்டிய திகதியிலிருந்து 30 நாட்களுக்கு கூடுதலாக ஆனால் 60 நாட்களுக்கு குறைவாக அல்லது சமமாக நிலுவையிலுள்ள கொடுப்பனவு | செலுத்தவேண்டிய திகதியிலிருந்து 90 நாட்களுக்கு கூடுதலாக ஆனால் 180 நாட்களுக்கு குறைவாக அல்லது சமமான நாட்களுக்கு நிலுவையிலுள்ள கொடுப்பனவு | செலுத்தவேண்டிய திகதியிலிருந்து 180 நாட்களுக்கு கூடுதலாக ஆனால் 270 நாட்களுக்கு குறைவாக நிலுவையிலுள்ள கொடுப்பனவு | செலுத்தப்படவேண்டிய திகதியிலிருந்து 270 நாட்களுக்கு கூடுதலாக செலுத்தப்படாது கொடுப்பனவு |
| மாதாந்த அடிப்படையில் அல்லது கூடுதலான காலப்பகுதியில் மீளச்செலுத்தத்தக்க கொடுகடன் வசதி | செலுத்தவேண்டிய திகதியிலிருந்து 90 நாட்களுக்கு கூடுதலாக நிலுவையிலுள்ள முதல் அல்லது வட்டி அல்லது இரண்டும்<br>கொடுகடன் அட்டையினைப் பொறுத்தவரை குறைந்தபட்ச கொடுப்பனவு செலுத்தப்படவேண்டிய திகதியிலிருந்து 90 நாட்களுக்கும் கூடுதலாக நிலுவையிலிருத்தல் | செலுத்தவேண்டிய திகதியிலிருந்து 90 நாட்களுக்கு கூடுதலாக ஆனால் 180 நாட்களுக்கும் குறைவாக அல்லது சமமாக நிலுவையிலுள்ள கொடுப்பனவு<br>கொடுகடன் அட்டையினைப் பொறுத்தவரை குறைந்தபட்ச கொடுப்பனவு செலுத்தப்படவேண்டிய திகதியிலிருந்து 90 நாட்களுக்கும் கூடுதலாக ஆனால் 180 நாட்களுக்கு குறைவாக அல்லது சமமாக நிலுவையிலிருத்தல் | செலுத்தவேண்டிய திகதியிலிருந்து 180 நாட்களுக்கு கூடுதலாக ஆனால் 270 நாட்களுக்கும் குறைவாக அல்லது சமமாக நிலுவையிலுள்ள கொடுப்பனவு<br>கொடுகடன் அட்டையினைப் பொறுத்தவரை குறைந்தபட்ச கொடுப்பனவு செலுத்தப்படவேண்டிய திகதியிலிருந்து 180 நாட்களுக்கும் கூடுதலாக ஆனால் 270 நாட்களுக்கு குறைவாக அல்லது சமமாக நிலுவையிலுள்ள கொடுப்பனவு | செலுத்தவேண்டிய திகதியிலிருந்து 270 நாட்களுக்கு கூடுதலாக ஆனால் 360 நாட்களுக்கும் குறைவாக அல்லது சமமாக நிலுவையிலுள்ள கொடுப்பனவு<br>கொடுகடன் அட்டையினைப் பொறுத்தவரை குறைந்தபட்ச கொடுப்பனவு செலுத்தப்படவேண்டிய திகதியிலிருந்து 270 நாட்களுக்கும் கூடுதலாக ஆனால் 360 நாட்களுக்கு குறைவாக அல்லது சமமாக நிலுவையிலுள்ள கொடுப்பனவு | செலுத்தவேண்டிய திகதியிலிருந்து 360 நாட்களுக்கு கூடுதலாக நிலுவையிலுள்ள கொடுப்பனவு<br>கொடுகடன் அட்டையினைப் பொறுத்தவரை குறைந்தபட்ச கொடுப்பனவு செலுத்தப்படவேண்டிய திகதியிலிருந்து 260 நாட்களுக்கும் கூடுதலான காலப்பகுதிக்கு நிலுவையிலுள்ள கொடுப்பனவு |

| | | செயற்படாக் கடன்களின் வகைப்படுத்தல் | | | |
|---|---|---|---|---|---|
| வசதியின் வகை | வகைப்படுத்தல் பிரமாணம் | விசேடமாக குறிப்பிடப்பட்ட வகை | குறைந்த தர வகை | ஐயத்திற்குரிய வகை | இழப்பு வகை |
| | | | | | |
| குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் அல்லது செலுத்தப்படவேண்டிய திகதியில் (ஒரு தடவையிலான கொடுப்பனவு) ஒரு தவணையில் மீளச் செலுத்தப்படத்தக்க கொடுகடன் வசதிகள் | இணங்கப்பட்ட காலப்பகுதியின் இறுதியிலிருந்து அல்லது செலுத்தப்படவேண்டிய திகதியிலிருந்து 90 நாட்களுக்கும் கூடுதலாக நிலுவையிலுள்ள தவணைகள் (முழுமையாக/ பகுதியாக) | இணங்கப்பட்ட காலப்பகுதியின் இறுதியிலிருந்து அல்லது செலுத்தப்படவேண்டிய திகதியிலிருந்து 90 நாட்களுக்கும் கூடுதலாக ஆனால் 180 நாட்களுக்கு குறைவாக அல்லது அதற்குச் சமமாக நிலுவையிலுள்ள செலுத்தப்படாதவை. | இணங்கப்பட்ட காலப்பகுதியின் இறுதியிலிருந்து அல்லது செலுத்தப்படவேண்டிய திகதியிலிருந்து 180 நாட்களுக்கும் கூடுதலாக ஆனால் 270 நாட்களுக்கு குறைவாக அல்லது அதற்குச் சமமாக செலுத்தப்படாது நிலுவையிலுள்ளவை | இணங்கப்பட்ட காலப்பகுதியின் இறுதியிலிருந்து அல்லது செலுத்தப்படவேண்டிய திகதியிலிருந்து 270 நாட்களுக்கும் கூடுதலாக ஆனால் 360 நாட்களுக்கு குறைவாக அல்லது அதற்குச் சமமான காலப்பகுதிக்கு செலுத்தப்படாது நிலுவையிலுள்ளவை. | இணங்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து அல்லது செலுத்தப்படவேண்டிய திகதியிலிருந்து 360 நாட்களுக்கு மேலான காலப்பகுதிக்கு செலுத்தப்படாது நிலுவையிலுள்ளவை. |

அட்டவணை 2: செயற்படாக் கடன்கள் - சாத்தியமான இடர்நேர்வுகளை அடிப்படையாகக் கொண்டவை

| | | செயற்படாக் கடன்களின் வகைப்படுத்தல் | | | |
|---|---|---|---|---|---|
| வசதியின் வகை | வகைப்படுத்தல் பிரமாணம் | விசேடமாக குறிப்பிடப்பட்ட வகை | குறைந்த தர வகை | ஐயத்திற்குரிய வகை | இழப்பு வகை |
| | இவ்வட்டவணையில் சாத்தியமான இடர்நேர்வுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் உத்வேகப்படுத்தப்பட்ட பிரமாணம் | (i) கடன்பாட்டாளரின் தொழிற்பாடுகளில் காணப்படும் வீழ்ச்சியடைந்து செல்லும்போக்கு, கடன்பாட்டாளரின் நிதியியல் நிலைமையில் சாத்தியமான பலவீனமான தன்மை காணப்படுவதற்கான சமிஞ்சைகளைக் காட்டுகின்றது. மீள்கொடுப்பனவு ஆபத்திலுள்ளமையினை அது காட்டுவதாக இல்லை; அல்லது | (i) கொடுகடன் வசதியின் ஒப்பந்த மீள்கொடுப்பனவு நியதிகளைப் பூர்த்திசெய்வதற்கு கடன்பாட்டாளரினால் இயலாமல் இருப்பது; | (i) கடன்பாட்டாளர் குறைந்த வகையின்படி கொடுகடனில் எடுத்துக்காட்டுவதிலும் பார்க்க மிகக் கடுமையான பயணத்தினை எடுத்துக்காட்டுகிறார். எனவே வெளிநின்ற கொடுகடன் வசதிகளை முழுமையாக அறிவித்துக்கொள்வது கேள்விக்குரியதே அல்லது | (i) ஏதேனும் முக்கியமான நிதியியல் ஒப்பந்தங்கள் கடன்பாட்டாளரினால் மீறப்படும். |

| | | செயற்படாக் கடன்களின் வகைப்படுத்தல் | | | |
|---|---|---|---|---|---|
| வசதியின் வகை | வகைப்படுத்தல் பிரமாணம் | விசேடமாக குறிப்பிடப்பட்ட வகை | குறைந்த தர வகை | ஐயத்திற்குரிய வகை | இழப்பு வகை |
| | | | | | |
| | | (ii) எதிர்காலத்தில் கடன்பாட்டாளரின் இலாபத்தன்மையினையும் வியாபாரத்தினையும் பாதகமான விதத்தில் பாதிக்கப்படக்கூடிய ஏதேனும் பொருளாதார மற்றும் சந்தை நிலைமைகள் | (ii) கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான போதுமான காசுப் பாய்ச்சலை உருவாக்குவதற்கு முடியாமலிருக்கும் பலயீனமான நிதியியல் நிலைமை அல்லது கடன்பாட்டாளரினால் இயலாமல் இருக்கும் தன்மை; | (ii) இழப்பிற்கான நிகழ்தகவு உயர்வாக இருத்தல், ஆனால் எஞ்சியுள்ள சரியான தொகை இன்னமும் குறைந்தளவிலேயே காணப்படுகிறது. | (ii) கடன்பாட்டளர் பலயீனமான நிதியியல் நிலைமையாய் இருத்தல் அல்லது வருமானத்தினை ஈட்டுவதற்கான வாடிக்கையாளரின் இயலாற்றல் குறைவாக இருத்தல் இது வாடிக்கையாளர் படுகடன் தீர்ப்பனவு செய்யமுடியமல் இருப்பதனை எடுத்துக்காட்டுகிறது. |
| | | | (iii)அதே உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் அல்லது வேறுஏதேனும் நிதியியல் நிறுவனத்தினால் (அத்தகைய தகவல்கள் கிடைக்கத்தக்கதாக இருக்குமிடத்து) வழங்கப்பட்ட ஏனைய கொடுகடன் வசதிகளை மீளச் செலுத்துவதற்கு இடர்பாடுகளை எதிர்நோக்கும் கடன்பாட்டாளர்கள் | (iii) கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவினை ஏற்கனவே பாதித்த சாதகமற்ற சந்தை நிலைமைகள் அல்லது தொழிற்பாட்டுப் பாய்ச்சல்கள் | (iii) கடன்பாட்டாளரின் வியாபாரம் நிச்சயமற்றதொன்றாக மாறிவிடுதல் அல்லது கடன்பாட்டாளர் குறிப்பிட்ட தேவைக்காக பெற்ற நிதியினை வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தல். |
| | | | (iv) எதிர்காலத்தில் கடன்பாட்டாளரின் மீள்கொடுப்பனவு இயலாற்றலைப் பாதிக்கக்கூடிய சாதகமற்ற பொருளாதார சந்தை நிலைமைகள் அல்லது தொழிற்பாட்டுப் பிரச்சனைகள் | | (iv) கடன்பாட்டாளர் இறந்துவிடுவதுடன் படுகடனை மீளச் செலுத்துவதற்கு சொத்துக்கள் இல்லாமை |

| | | செயற்படாக் கடன்களின் வகைப்படுத்தல் | | | |
|---|---|---|---|---|---|
| வசதியின் வகை | வகைப்படுத்தல் பிரமாணம் | விசேடமாக குறிப்பிடப்பட்ட வகை | குறைந்த தர வகை | ஐயத்திற்குரிய வகை | இழப்பு வகை |
| | | | | | |
| | | | | | (v) கடன்பாட்டளர் அவரது வியாபாரத்தினை நிறுத்திவிடுதல் அல்லது கலைத்துவிடுதல் மற்றும் கடன்பாட்டாளரின் முழுச் சொத்துக்கள் தொடர்பிலும் முன்னுரிமை வசதிகளுடன் கூடிய விதத்தில் ஏனைய கடன் வழங்குவோருக்கு படுகடனுக்காக சொத்துக்களை வழங்குமிடத்து குறிப்பிட்ட கடன்பாட்டாளரின் மொத்தக் கோரல் சொத்துக்களது பெறுமதியினை விஞ்சுகிறது |
| | | | | | (vi) உரிமம்பெற்ற நிதிக் கம்பனி கடன்பாட்டாளருக்கெதிராக வாக்குமுறிவு வழக்கினைத் தொகுத்திருக்கிறது அல்லது |
| | | | | | (vii) கடன்பாட்டளருக்கெதிராக வழக்குத்தொடுத்த ஏனைய கடன் வழங்கியோருடன் சேர்த்து சொத்துரிமையில் பங்கேற்பதற்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனி விண்ணப்பித்திருக்கிறது. |
| | | | | | (viii) உரிமம்பெற்ற நிதிக் கம்பனி கடன்பாட்டாளரை தொடர்புகொள்ள கண்டறிய முடியாமலிருத்தல். |

அட்டவணை 3: மீள அட்டவணைப்படுத்தப்பட்ட செயற்படாக் கடன்களை செயற்படும் கடன்களாக மீள வகைப்படுத்தல்

| செயற்படும் கடனாக தர முயர்த்தப்பட்டவை | விசேடமாக குறிப்பிடப்பட்ட வகை | குறைந்த தர வகை மற்றும் ஐயத்துக்குரிய வகை | இழப்பு வகை |
|---|---|---|---|
| நாளாந்த அடிப்படையில் மீளச் செலுத்தத்தக்க கொடுகடன் வசதிகள் | மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட நியதிகளின் கீழ் முதலில் செலுத்தப்பட வேண்டியிருக்கும் வட்டி அல்லது முதல் தொகையின் முதல் கொடுப்பனவு செய்யப்படுகின்ற திகதிக்குப் பின்னரான 4 நாள் காலப்பகுதி | மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட நியதிகளின் கீழ் உரிய திகதியில் வட்டி அல்லது முதல் இதில் எது முதலில் கொடுப்பனவு செய்யப்படுகின்றதோ அத்திகதியின் பின்னரான 7 நாள் காலப்பகுதி | மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட நியதிகள் உரிய திகதியில் வட்டி அல்லது முதல் தொகை இதில் எது முதலில் கொடுப்பனவு செய்யப்படுகின்றதோ அத்திகதியின் பின்னரான 15 நாள் கொண்ட காலப்பகுதி |
| வாராந்தம் மற்றும் இரு வாரங்களுக்கொரு தடவை மீளச் செலுத்தப்படத்தக்க கொடுகடன் வசதிகள் | மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட நியதிகளின் கீழ் உரிய திகதியில் வட்டி அல்லது முதல் தொகை இதில் எது முதலில் கொடுப்பனவு செய்யப்படுகின்றதோ அத்திகதியின் பின்னரான 15 நாள் காலப்பகுதி | மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட நியதிகளின் கீழ் உரிய திகதியில் வட்டி அல்லது முதல் தொகை இதில் எது முதலில் கொடுப்பனவு செய்யப்படுகின்றதோ அத்திகதியின் பின்னரான 30 நாள் காலப்பகுதி | மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட நியதிகளின் கீழ் உரிய திகதியில் வட்டி அல்லது முதல் இதில் எது முதலில் கொடுப்பனவு செய்யப்படுகின்றதோ அத்திகதியின் பின்னரான 60 நாள் காலப்பகுதி |
| ஒரே தடவையிலான கொடுப்பனவுகள் உட்பட மாதாந்த அடிப்படையில் அல்லது கூடுதலான காலப்பகுதியில் மீளச் செலுத்தப்படத்தக்க கொடுகடன் வசதிகள் | மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட நியதிகளின் கீழ் உரிய திகதியில் வட்டி அல்லது முதல் தொகை இதில் எது முதலில் கொடுப்பனவு செய்யப்படுகின்றதோ அத்திகதியின் பின்னரான 90 நாள் காலப்பகுதி | மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட நியதிகளின் கீழ் உரிய திகதியில் வட்டி அல்லது முதல் இதில் எது முதலில் கொடுப்பனவு செய்யப்படுகின்றதோ அத்திகதியின் பின்னரான 180 நாள் காலப்பகுதி | மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட நியதிகளின் கீழ் உரிய திகதியில் வட்டி அல்லது முதல் இதில் எது முதலில் கொடுப்பனவு செய்யப்படுகின்றதோ அத்திகதியின் பின்னரான 360 நாள் காலப்பகுதி |

## இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9: நிதியியல் சாதனங்களைப் பின்பற்றுவது தொடர்பாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான கொடுகடன் வசதிகளின் வழிகாட்டல்கள், வகைப்படுத்தல் மற்றும் அளவிடல் தொடர்பான பணிப்புரைகளின் செயற்பரப்பு

1. ஆற்றல்வாய்ந்த கொடுகடன் முகாமைத்துவத்திற்கான தத்துவங்கள்

1.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் ஏற்புடைத்தான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏற்புடைத்தான முன்மதியுடைய பணிப்புரைகள் என்பனவற்றிற்கிணங்க, போதுமான பெறுமதியிழத்தல் படிகளை தொடர்ச்சியாக நிர்ணயித்துக் கொள்வதற்காக பணிப்பாளர் சபையும் மூத்த முகாமைத்துவமும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் காத்திரமான உள்ளகக் கட்டுப்பாட்டின் முறைமையொன்று உட்பட, பொருத்தமான கொடுகடன் இடர்நேர்வு நடைமுறைகளைக் கொண்டிருக்கின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்புடையனவாகும்.

1.2 உரிமம்பெற்ற நிதிக் கம்பனி, அனைத்து நிதியியல் சொத்துக்கள் மீதான கொடுகடன் இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்கும் அளவிடுவதற்குமென கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை வலியுறுத்துகின்ற ஆற்றல்வாய்ந்த முறையியல்களை ஆவணப்படுத்தி பின்பற்றி வருதல் வேண்டும். பெறுமதி இழக்கும் படிகளின் அளவிடல் அவற்றின் உத்வேக முறையியல்கள், ஏற்புடைத்தான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏற்புடைத்தான முன்மதியுடைய பணிப்புரைகள் என்பனவற்றிற்கிணங்க எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களின் பொருத்தமானதும் உரிய நேரத்திலுமான அங்கீகரிப்புக்களில் ஏற்படும் விளைவுகள் என்பனவற்றின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படுதல் வேண்டும்.

1.3 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் பெறுமதி இழக்கும் படிகளின் கூட்டுத்தொகையானது படிகளின் கூறுகளை கருத்திற்கொள்ளாது ஒன்றுசேர்ந்த அடிப்படையில் அல்லது தனிப்பட்ட அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதுடன் போதுமானதாகவும் ஏற்புடைத்தான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஏற்புடைத்தான முன்மதியுடைய பணிப்புரைகளின் குறிக்கோள்களுடன் இசைந்துசெல்வதாகவும் இருத்தல் வேண்டும்.

1.4 எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களை மதிப்பிடவும் அளவிடவும் பயன்படுத்தப்படுகின்ற மாதிரிகளை மதிப்பிடுவதற்கு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் கொள்கைகளையும் நடைமுறைகளையும் நடைமுறையில் கொண்டிருத்தல் வேண்டும்.

1.5 உரிமம்பெற்ற நிதிக் கம்பனி அனுபவம் வாய்ந்த கொடுகடன் மதிப்பிடலை, குறிப்பாக, எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களை அளவிடுவதற்கான பேரண்ட பொருளாதாரக் காரணிகள் உட்பட நியாயமான மற்றும் ஆதரவளிக்கத்தக்க எதிர்பார்க்கப்படுகின்ற தகவல்களின் வலுமிக்க பரிசீலனையினைப் பயன்படுத்தல் வேண்டும்.

1.6 கொடுகடன் இடர்நேர்வுகளை ஒப்பிடுவதற்கும் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களை கணக்கிடுவதற்குமாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் போதுமான முறைமைகள், கருவிகள் மற்றும் தரவுகளின் ஆதரவுடன் வலுவான கொடுகடன் இடர்நேர்வு மதிப்பீடுகளையும் அளவு முறையினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

1.7 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் பொதுமக்களுக்கான வெளிப்படுத்துகைகள் உரிய நேரத்திலான, பொருத்தமான, பயன்மிக்க தகவல்களை வழங்குவதன் மூலம் வெளிப்படைத்தன்மையினையும் ஒப்பீட்டுத் தன்மையினையும் மேம்படுத்தல் வேண்டும்.

2. நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்தல் மற்றும் அளவிடல்

நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தலுக்கு வசதியளிப்பதற்காக பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வியாபார மாதிரிகளை நடைமுறைக்கிடல் வேண்டும். இந்நோக்கத்திற்காக குறிக்கோள்கள், வரைவிலக்கணங்கள், பண்பியல் தன்மைகள், பிரமாணங்கள் மற்றும் தற்போது இடம்பெற்று வருகின்ற வியாபார மாதிரிகளை மதிப்பிடுவதற்கான போதுமான நடைமுறைகள் மற்றும் முறைமைகளுடன் சேர்ந்த தொழிற்பாட்டு கொள்கைகளும் நடைமுறையில் இருத்தல் வேண்டும்

3. மீளவகைப்படுத்தல்

3.1 உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நிதியியல் சொத்துக்களின் மாற்றங்களுக்கான வியாபார மாதிரிகளின் குறிக்கோள்கள் மற்றும் அதன் முன்னைய மாதிரி மதிப்பீடு என்பன இனிவரும் காலங்களில் பிரயோகிக்க முடியாது இருக்குமாயின், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இன் ஏற்பாடுகளின் கீழ் நிதியியல் சொத்துக்களுக்கிடையில் மீளவகைப்படுத்தல் தேவைப்படுத்தப்படுகிறது.

3.2 இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இன் தேவைப்பாடுகளுடன் இசைந்து செல்லும்விதத்தில், வியாபார மாதிரிகளில் காணப்படும் அத்தகைய மாற்றங்களும் மீள்வகைப்படுத்தல்களும் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்படுதல் வேண்டும். என்பதுடன் அது பற்றி அத்தகைய ஒப்புதல் திகதியிலிருந்து 7 வேலைநாட்களுக்குள் வங்கியல்லா நிதியியல் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

4. நிதியியல் சொத்துக்களின் பெறுமதி இழப்பு

4.1 பொதுவானவை

(அ) இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 இன்கீழ் பெறுமதி இழத்தல் என்பது எதிர்பார்த்தல் மற்றும் கடன் இழப்பு ஒதுக்குகளில் ஏற்படும் மாற்றங்களை அடையாளம் காணப்பட்டு மதிப்பிடுவதாகும்.

(ஆ) ஆரம்ப இனங்காணலில், குறைந்தபட்சம் 12 மாத எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்கள் கடன் தீர்ப்பனவுச் செலவில் அல்லது ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தினூடான சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்களுக்கான இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன.

(இ) ஆரம்ப இனங்காணலின் பின்னர், ஆயுள்காலம் எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்கள் கொடுகடன் இடர்நேர்வில் கணிசமான அதிகரிப்புக்கள் காணப்படுகையில் சொத்துக்களில் அங்கீகரிக்கப்படுகின்றன (கொள்வனவு செய்யப்பட்ட அல்லது உருவான கொடுகடன் இழப்பு நிதியியல் சொத்துக்களுக்கானவை தவிர).

4.2 ஆயுள்காலம் எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்களும் 12 மாதம் எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்களும்

(அ) ஒவ்வொரு அறிக்கையிடும் நாளிலும், ஆரம்பத்தில் இனங்காணப்பட்டதன் பின்னர் (கொள்வனவு செய்யப்பட்ட அல்லது உருவான கொடுகடன் பெறுமதி இழக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களுக்கானவை தவிர) நிதியியல் சாதனங்களின் கொடுகடன் இடர்நேர்வு குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருக்குமாயின், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் ஆயுள் காலம் எதிர்பார்க்கப்படுகின்ற இழப்புக்களுக்கு சமமான தொகையொன்றில் நிதியியல் சாதனங்களுக்கான இழப்புப்படியினை அளவிடல் வேண்டும்.

(ஆ) கொள்வனவு செய்யப்பட்ட அல்லது உருவான கொடுகடன் பெறுமதி இழக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களுக்காக ஆயுள்காலம் எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்கள் அளவிடப்படுதல் வேண்டும்.

(இ) கோட்பாட்டு ரீதியாக, ஆயுள் காலம் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களும் கொடுகடன் பெறுமதி இழக்கப்பட்ட கடன்களும் தனிப்பட்ட அடிப்படையில் வழங்கப்படுகின்றன. எனினும், கடன்பாட்டாளரை குறிப்பாகக் கொண்ட தகவல்கள் போதுமானவையாக இல்லாமையின் காரணமாக, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் பொதுவான அடிப்படையில் பொருத்தமான குழுமங்களின் மீது அல்லது சொத்துப்பட்டியல் மதிப்பீட்டின்படி செயற்படலாம்.

(ஈ) அறிக்கையிடும் நாளன்று, நிதியியல் சாதனங்களின் கொடுகடன் இடர்நேர்வு, ஆரம்ப இனங்காணலின் பின்னர் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்திருக்காதவிடத்து, உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், நிதியியல் சாதனங்களுக்கான இழப்புக்களை 12 மாத எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்பிற்குச் சமமானதொரு தொகையில் அளவிடுதல் வேண்டும்.

4.3 பொருளாதார காரணிச் சீராக்கம்

(அ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் இலங்கை மத்திய வங்கி, பன்னாட்டு நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி அத்துடன்/ அல்லது உலக வங்கி போன்ற சுயாதீனமான நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட எதிர்வுகூறல்கள் மற்றும் எறிவுகளை அத்தகைய எறிவுகள் கிடைக்கத்தக்கதாக இருக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பொருளாதார நிலைமைகளையும் எதிர்வுகூறல்களையும் பிரதிபலிக்கும் விதத்தில் கொடுகடன் ஏற்பாட்டு மாதிரிகளை சீராக்கும்பொழுது பயன்படுத்துதல் வேண்டும்.

(ஆ) மேற்குறிப்பிட்ட மூலங்களினூடாக தேவையான தகவல்கள் கிடைக்காதிருக்குமாயின் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நம்பகமான மாற்று மூலங்களைப் பயன்படுத்தவேண்டும் என்பதுடன் ஆவணச் சான்றுகளையும் பேணுதல் வேண்டும்.

(இ) பயன்படுத்தப்பட வேண்டிய மூலங்களை குறித்துரைப்பதற்கு பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கொள்கைகள் கிடைக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் தமக்கு நன்மையளிக்கும் மூலங்களை தேர்வு செய்யக்கூடாது.

4.4 கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு

ஆயுள்காலம் எதிர்பார்க்கப்படும் இழப்புக்களை கணிக்கின்ற நோக்கத்திற்காக குறைந்தபட்சமாக, பின்வரும் காரணங்கள்/ நிபந்தனைகளின் ஒன்று அல்லது அதற்கும் கூடுதலானவை பூர்த்திசெய்யப்படுமாயின் அது கொடுகடன் இடர்நேர்வில் கணிசமானதொரு அதிகரிப்பாகக் கருதப்படும்.

(அ) வாடிக்கையாளரொருவரின் ஒப்பந்த ரீதியான கொடுப்பனவுகள் 30 நாட்களுக்கும் (தற்காலிக ஏற்பாடு) கூடுதலாக செலுத்தப்படாதிருக்கும் பொழுது[1] (நாளாந்த, வாராந்த மற்றும் இரு வாரங்களுக்கொருதடவையுடன் தொடர்புபடாதது)

(ஆ) ஓராண்டிற்குள் பெறப்பட்டிருக்கும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் வாடிக்கையாளரொருவரின் இடர்நேர்வு தரமிடல் வெளிவாரி கொடுகடன் தரமிடல் முகவரொருவரினால் 'B+' இற்கு தரம் குறைக்கப்படும் பொழுது அத்துடன்/ அல்லது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் உள்ளக தரமிடல் முறைமையில் இரண்டு புள்ளிகளைக் கொண்ட தரம் குறைப்பு காணப்படுகின்ற பொழுது வெளிவாரி கொடுகடன் தரமிடல் கிடைக்காத சந்தர்ப்பத்தில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் வெளிவாரி கொடுகடன் மதிப்பிடல் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட தரமிடல்களுடன் அவர்களது உள்ளகக் கொடுகடன் இடர்நேர்வு தரமிடலையும் சேர்ந்து திட்டமிடுமாறு கேட்டுக்கொள்ளப்படலாம். இந்நோக்கத்திற்காக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் 2018ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையில் மூலதன போதுமைத் தேவைப்பாடுகள் அல்லது திருத்தப்பட்டவாறான பணிப்புரையில் தரப்பட்டுள்ள வெளிவாரி கொடுகடன் தரமிடல் திட்டத்தினை பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

(இ) எதிர்காலப் பொருளாதார நிலைமைகளின் நியாயமானதும் ஆதரவளிக்கத்தக்கதுமான எதிர்வுகூறல்கள் வாடிக்கையாளர்/ வாடிக்கையாளர் குழுமம், சொத்துப்பட்டியல் அல்லது சாதனங்களின் செயலாற்றத்தினை நேரடியாகப் பாதிக்கும் பொழுது.

(ஈ) வாடிக்கையாளர்/ வாடிக்கையாளர் குழுமத்தின் அல்லது சாதனமொன்றின் செயலாற்றத்தினை நேரடியாகப் பாதிக்கின்ற விதத்தில் புவியியல் ரீதியான அமைவிடத்தில் அல்லது இயற்கையிலான பெரும் பாதிப்புக்களால் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படும் பொழுது.

(உ) பிணையுறுதியின் பெறுமதி குறிப்பிடத்தக்களவில் குறைவடையும் பொழுது அத்துடன்/ அல்லது பிணையுறுதியின் நம்பகத் தன்மை ஐயத்திற்குரியதாக இருக்கும் பொழுது. வரையறைகள் தீர்மானிக்கப்பட்டு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளால் அவை ஆவணப்படுத்தப்படல் வேண்டும்.

(ஊ) வாடிக்கையாளர் வழக்காடல்களுக்கு உட்பட்டிருக்கும் பொழுது அது கொடுகடன் வசதியின் செயலாற்றத்தினை குறிப்பிடத்தக்களவிற்கு பாதிக்கும் பொழுது.

---

1. நிலுவையிலுள்ள நாட்களை கொடுப்பனவுகளுக்கான ஒப்பந்த ரீதியான திகதியிலிருந்து கணித்தல் வேண்டும்.

(எ) ஆரம்பத்தில் இணங்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டாண்டுகளுக்கும் கூடுதலான காலமாக வியாபாரத் தொடர்பாடுகள்/ செயற்றிட்டங்களை ஆரம்பிப்பதில் காணப்பட்ட தாமதம்.

(ஏ) கொடுப்பனவுகளின் நீடிப்பு மற்றும் பிற்போடுதல், ஒப்பந்தங்களின் தளர்த்தல் என்பன உள்ளிட்ட சலுகைகள் காரணமாக நியதிகளை மாற்றியமைத்தல்.

(ஐ) வாடிக்கையாளர் மரணமடையுமிடத்து/ வங்குரோத்துத் தன்மையினை அடையும் பொழுது.

(ஒ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனி, வாடிக்கையாளரை தொடர்புகொள்ள அல்லது கண்டுபிடிக்க இயலாமல் இருக்கும்பொழுது.

**4.5 எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்களைக் கணிப்பதற்கான மாதிரிகள்**

(அ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்களை மதிப்பிடும் பொழுது அனைத்துக் கிடைக்கத்தக்கதும் தொடர்பானதுமான உள்ளக மற்றும் வெளிவாரி தரவுகளைப் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் மதிப்பீடுகள் வலுவானவையாகவும், பக்கச்சார்பற்றவைகளாகவும் தற்போதைய வெளிப்படுத்துகையினைப் பிரதிபலிப்பதாக இருப்பதனையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ஆ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், கடன்பாட்டாளர் மற்றும் சபை ஒப்புதலளித்த கொள்கை என்பனவற்றின் கொடுகடன் மதிப்பீட்டின் அடிப்படையில், உருவாக்கப்பட்ட சாதனங்களுக்கான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களைக் கணித்தல் வேண்டும். மேலும், கொடுகடன் மதிப்பிடலும் கணிப்பிடலும் குறைந்தபட்சம் அரையாண்டிற்கொரு தடவை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(இ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் இ.நி.அ. நியமம் 9இன் கீழ் எதிர்பாபர்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களைத் தீர்மானிப்பதற்கு வலுவான மாதிரிகளை அபிவிருத்தி செய்தல் வேண்டும். அத்தகைய மாதிரிகள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் இடர்நேர்வு தோற்றப்பாட்டினை பிரதிபலிக்கின்ற விதத்தில் மாற்றியமைக்கப்படல் வேண்டும்.

(ஈ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் அவர்களினால் இந்நோக்கத்திற்காக பின்பற்றப்படுகின்ற மாதிரிகளை விளங்கிக் கொள்ளும் விதத்தில் தொடர்பான அலுவலர்கள் சிறந்த பயிற்சியையும் தகுதியையும் கொண்டிருக்கின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(உ) மாதிரி அபிவிருத்தி தொடர்பில், வெளிவாரி விற்பனையாளர்கள்/ ஆலோசனையாளர்களின் உதவியினைப் பெறும்பொழுது கடுமையான ஆளுகை மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டுச் செயன்முறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

(ஊ) வேறுபட்ட சொத்துப்பட்டியலுக்கும் சாதனங்களுக்கும் வேறுபட்ட மாதிரிகள் பயன்படுத்தப்படுவது தொடர்பில், உரிமம்பெற்ற வங்கிகள் தெரிவு செய்யப்பட்ட மாதிரிகள் ஏன் பொருத்தமானவை என்பதற்கான காரணங்களை ஆவணப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் அனைத்துக் கொடுகடன் மாதிரிகளும் குறைந்தபட்சம் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்படுதலும் வேண்டும்.

(எ) கொடுகடன் இடர்நேர்வு மதிப்பீடும் அளவீட்டு மாதிரிகளும் தொடர்ச்சியாகத் துல்லியமான தன்மை, சீரான தன்மை மற்றும் பாரபட்சமற்ற உள்ளக மதிப்பீடுகள் என்பனவற்றை இயலச் செய்வதனை உறுதிப்படுத்தும் விதத்தில் காத்திரமான மாதிரி உறுதிப்படுத்தல் செயன்முறைகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

(ஏ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் இலாபத்தினை சுமூகப்படுத்தும் நோக்கத்திற்காக பயன்படுத்துகின்ற அளவுகள், உள்ளீடுகள் மற்றும் அனுமானங்களில் மாற்றங்கள் செய்வதனை நிறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன. எதிர்பார்க்கப்படும் இழப்பு மாதிரியில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணம் மற்றும் நியாயப்படுத்தலிற்கான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன் முதன்மை இடர்நேர்வு அலுவலரினால் நியாயப்படுத்தப்பட்டு பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்படுதல் வேண்டும்.

(ஐ) கடன்பாட்டாளரின் மீள்கொள்வனவு இயலாற்றல் தொடர்பில் பொதுவான பொருளாதார அபிவிருத்திகளில் ஏற்படும் மாற்றங்களின் தாக்கத்தினை கரிசனையில் கொண்டு அனுமானங்களை போதுமான முன்மதியுடனும் நியாயமானதும் உதவியளிக்கத்தக்கதுமான தகல்களையும் அதேபோன்று அனைத்து சாத்தியமான அதன் சூழ்நிலைகளுடனும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(ஒ) குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், மேற்குறிப்பிட்ட நிலைமைகள் கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைத் தோற்றுவிக்காது. அத்தகைய சந்தர்ப்பத்தில், பணிப்பாளர் சபை அத்தகைய மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் அடுத்த அறிக்கையிடல் காலத்தில் இலங்கை மத்திய வங்கிக்கு அறிவித்தலும் வேண்டும்.

**4.6 நிதியியல் சாதனங்களின் பெறுமதி இழத்தல் மீதான குறைந்தபட்ச பிரமாணங்கள்**

**(அ) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் பூர்த்திசெய்யப்பட வேண்டிய குறைந்தபட்ச பிரமாணங்கள்**

(i) **கட்டம் 1 :** கட்டம் 2 அல்லது கட்டம் 3 இன்கீழ் வகைப்படுத்தப்படாத அனைத்துக் கொடுகடன் வசதிகளும்

(ii) **கட்டம் 2 :** கீழே தரப்பட்டுள்ள நிலுவையிலுள்ள நாட்களை அடிப்படையாகக் கொண்டது.

| வசதி வகை | 2021/22 | 2022/23 |
|---|---|---|
| நாளாந்தம் மீளச் செலுத்தப்படத்தக்க கொடுகடன் வசதிகள் | 07 | 04 |
| வாராந்தம் அல்லது இரு வாரங்களுக்கொருமுறை என்ற அடிப்படையில் மீளச் செலுத்தப்படவேண்டிய கொடுகடன் வசதிகள் | 30 | 15 |
| மாதாந்தம் அல்லது அதற்குக் கூடுதலான காலத்தில் மீளச் செலுத்தப்படவேண்டிய கொடுகடன் வசதிகள் | 60 | 30 |

அ. மொத்தமாக அட்டவணைப்படுத்தப்பட்ட அனைத்து கடன் வசதிகள், கீழே 4.6(இ) ii இல் குறிப்பிடப்பட்ட கொடுகடன் வசதிகள்/ வெளிப்படுத்துகைகள் தவிர, மேலேயுள்ள அட்டவணையினை அடிப்படையாகக் கொண்டு மீள் அட்டவணைக்கு முன்னரும் மீள் அட்டவணைப்படுத்துவதற்கு பின்னரும் நிலுவையிலிருந்த கொடுகடன் வசதிகளின் காலம்

ஆ. "இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 09 - நிதியியல் சாதனம் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தல் மற்றும் அளவிடல் மீதான பணிப்புரையின் செயற்பரப்பிற்குள் நிதியியல் சாதனங்களினைப் பின்பற்றுவது தொடர்பான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான வழிகாட்டல்கள்" இன் பந்தி 4.4இல் அடையாளம் காணப்பட்டவாறு குறைந்த செயலாற்றத்தினைக் கொண்ட கொடுகடன் வசதிகள்/ வெளிப்படுத்துகைகள்.

(iii) **கட்டம் 3 :** கீழே தரப்பட்டுள்ள நிலுவையிலுள்ள நாட்களை அடிப்படையாகக் கொண்டது.

| வசதி வகை | 2021/22 | 2022/23 |
|---|---|---|
| நாளாந்தம் மீளச் செலுத்தப்படத்தக்க கொடுகடன் வசதிகள் | 15 | 07 |
| வாராந்தம் அல்லது இரு வாரங்களுக்கொருமுறை என்ற அடிப்படையில் மீளச் செலுத்தப்படவேண்டிய கொடுகடன் வசதிகள் | 60 | 30 |
| மாதாந்தம் அல்லது அதற்குக் கூடுதலான காலத்தில் மீளச் செலுத்தப்படவேண்டிய கொடுகடன் வசதிகள் | 120 | 90 |

அ. கூட்டாக அட்டவணைப்படுத்தப்பட்ட அனைத்து கடன் வசதிகள், கீழே 4.6(இ) ii இல் குறிப்பிடப்பட்ட கொடுகடன் வசதிகள்/ வெளிப்படுத்துகைகள் தவிர, மேலேயுள்ள அட்டவணையினை அடிப்படையாகக் கொண்டு மீள் அட்டவணைக்கு முன்னரும் மீள் அட்டவணைப்படுத்துவதற்கு பின்னரும் நிலுவையிலிருந்த கொடுகடன் வசதிகளின் காலம்

ஆ. முன்மொழியப்பட்ட புதிய பணிப்புரையின்படி செயற்படாக்கடன்களாக வகைப்படுத்தப்பட்ட அனைத்து கொடுகடன் வசதிகள்/ வாடிக்கையாளர்கள்

இ. "இலங்கை கணக்கீட்டு நியமங்கள் - இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 09 - நிதியியல் சாதனங்கள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தல் மற்றும் அளவிடல் மீதான பணிப்புரையின் செயற்பரப்பிற்குள் நிதியியல் சாதனங்களினைப் பின்பற்றுவது தொடர்பான உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கான வழிகாட்டல்கள்" இன் பந்தி 4.4இல் அடையாளம் காணப்பட்டவாறு செயற்படாக் கொடுகடன் வசதிகள்/ வாடிக்கையாளர்கள்.

ஈ. வெளிப்படுத்துகையொன்றில் அறவிடமுடியாத தொகையொன்று காணப்படுமிடத்து குத்தகை/ தவணைக் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் நிதியிடப்பட்ட சொத்துக்கள் மீளஉடமையில் கொள்ளப்படுகின்றன அல்லது விற்கப்படுகின்றன, பிணையுறுதியாக பொறுப்பேற்கப்பட்ட சொத்துக்கள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியினால் விற்கப்படுகின்றன.

**(ஆ) எதிர்பார்க்கப்படுகின்ற கொடுகடன் இழப்புக்களின் கணிப்பிற்காக குறைந்தபட்சம் பயன்படுத்தப்படவேண்டிய தவணை தவறும் நிகழ்தகவு மற்றும் இழப்பினை ஏற்படுத்திய தவணை தவறல் என்பனவற்றைக் கணிப்பதற்கான வழிகாட்டல் வருமாறு.**

(i) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் தவணை தவறும் நிகழ்தகவுகளைக் கணிக்கும் பொழுது குறைந்தபட்சம் 4 ஆண்டு தரவுகளைப் பயன்படுத்தல் வேண்டும் என்பதுடன் தரவுகளை அல்லது உள்ளீடுகளை ஏதேனும் விதத்தில் அமுல்படுத்துவதனை இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ii) உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் 4 ஆண்டுகளுக்கும் குறைவான போதுமானதற்ற கொடுகடன் வரலாற்றினை கொண்டவையாக புதிதாக கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளாக இருந்தாலன்றி, தவணை தவறும் நிகழ்தகவுகளையும் இழப்புக்களை ஏற்படுத்திய தவணை தவறுகைகளையும் கணிப்பதற்கு பதிலிகளைப் பயன்படுத்தக்கூடாது.

(iii) போதுமான தரவுகள் அல்லது உள்ளீடுகள் இல்லாமையின் காரணமாக உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் இழப்புக்களை ஏற்படுத்திய தவணை தவறுகைகளைக் கணிக்கமுடியாமல் இருக்கும் போது அத்தகைய உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் அத்தகைய வெளிப்படுத்துகைகளுக்காக இழப்புக்களை ஏற்படுத்திய தவணை தவறுகைகளில் குறைந்தபட்சம் 45 சதவீதத்தினைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன.

(iv) இலங்கை அரசாங்கத்தினால் உத்தரவாதமளிக்கப்பட்ட வெளிப்படுத்துகைகளுக்கான இழப்புக்களை ஏற்படுத்திய தவணை தவறுகைகளை கணிக்கும் போது பின்வருவனவற்றைப் பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்:

அ. பூஜ்யத்தினைக் கொண்ட இழப்புக்களை ஏற்படுத்திய தவணை தவறுகையொன்றினை, வட்டியுடன்கூடிய விதத்தில் முழுமையாக உள்ளடக்கப்பட்ட உத்தரவாதமொன்றிற்கு உட்பட்டு அரசாங்கத்தின் உத்தரவாதத்துடன்கூடிய வெளிப்படுத்துகைக்காக பிரயோகிக்கமுடியும் என்பதுடன் அரசாங்கத்தின் பொறுப்பாகவும் அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

ஆ. வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட அரச உத்தரவாதங்களுக்காக இழப்பினை ஏற்படுத்திய தவணை தவறும் நிதிகளில் 20 சதவீதத்தினை குறைந்தபட்சமாக பிரயோகிக்கலாம்.

இ. மேலே விடயம் 4.6 (ஆ) (iv) (அ) தவிர்ந்த வேறேதேனும் வடிவத்திலான மற்றைய உத்தரவாதங்களை இழப்புக்களை ஏற்படுத்திய தவணை தவறியவைகளை பூஜ்ய இழப்புக்களை ஏற்படுத்திய தவணை தவறுகைகளுக்குப் பதிலாகக் கணித்தல் வேண்டும்.

**(இ) ஏனைய வழிகாட்டல்கள்**

(i) ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகள்: எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பின் கணிப்புக்களுக்காக ஐந்தொகைக்கு வெளியிலான வெளிப்படுத்துகைகளை மாற்றுகின்ற போது உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், 2018ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரை - மூலதன போதுமைத் தேவைப்பாடுகள் அல்லது திருத்தப்பட்டவாறானவற்றில் குறித்துரைக்கப்பட்டவாறு கொடுகடன் மாற்றுக் காரணிகளின்படியான பெறுமதிகளைப் பயன்படுத்தமுடியும்.

(ii) கொடுகடன் வசதிகளைத் தரமுயர்த்தல்: கொடுகடன் வசதிகளை உயர்ந்த கட்டத்திலிருந்து தாழ்ந்த கட்டத்திற்கு (அதாவது கட்டம் 3 இலிருந்து கட்டம் 2 இற்கு) தரமுயர்த்தும் போது

அ. கொடுகடன் வசதிகளைத் தரமுயர்த்துவது இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தினால் அல்லது சுயாதீனமான தரப்பொன்றினால் மாத்திரம் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் அது கடன் மீளாய்வுப் பொறிமுறையிலிருந்து சுயாதீனமாகவும் இருத்தல் வேண்டும்.

ஆ. அத்தகைய தரமுயர்த்தலானது பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டதொன்றாகவும் பகுத்தறிவுத் தன்மை மற்றும் போதுமான ஆவணப்படுத்தல் என்பனவற்றின் மூலம் ஆதரவளிக்கபட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

இ. மீள் அட்டவணையிடப்பட்ட வசதிகளைத் தரமுயர்த்துவது தொடர்பில், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரையான - கொடுகடன் வசதிகளை வகைப்படுத்தல் மற்றும் அளவிடல் இற்கிணங்க நடந்துகொள்ளுதல் வேண்டும்.

**5. பிணையுறுதி மதிப்பீடு**

5.1 பிணையுறுதி தேறல்களிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற காசுப் பாய்ச்சல்களானது, பிந்திய அவதானிக்கப்பட்ட நம்பகமான சந்தை மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இடர்பாட்டிலுள்ள சொத்தினை விற்பதில் சேர்ந்து காணப்படும் இயல்பான நிச்சயமற்ற தன்மையினையும் பொருத்தமான விதத்தில் பிரதிபலித்தல் வேண்டும் (அத்தகைய தேறலுக்காக எடுக்கப்பட்ட நேரம் உட்பட).

5.2 மதிப்பீட்டில் காணப்படும் ஏதேனும் அதிகரிப்பு, அத்தகைய அதிகரிப்புக்கள் நிலையாக இருப்பதற்காக உறுதிப்படுத்தப்பட்ட வலுவான சான்றுகள் மூலம் நிரூபிக்கப்படுதலும் வேண்டும்.

5.3 மேலும், 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரை - கொடுகடன் வசதிகளின் வகைப்படுத்தல் மற்றும் அளவிடல் நோக்கத்திற்காக பிணையின் மதிப்பிடலுக்கான குறைந்தபட்ச பிரமாணங்கள் கீழே தரப்படுகின்றன:

(அ) தங்கத்தின் மூலம் பிணையிடப்பட்டது - போதுமான காப்புறுதி பாதுகாப்பொன்றிற்குட்பட்டு, தங்கத்தின் சந்தை விலைகள்.

(ஆ) பங்குகளின் ஒப்படைப்பு - குறிப்பீடு செய்யப்பட்டது - பிந்திய சந்தை விலைகளில் 90 சதவீதம்

(இ) மீண்டும் சொந்தமாக்கப்பட்ட ஊர்திகள் மற்றும் பொறிகள் - உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினால் சொந்தமாக்கப்பட்ட ஊர்திகள் மற்றும் பொறிகளைப் பொறுத்தவரையில், ஏற்றுக்கொள்ளத்தக்க மதிப்பீட்டாளரொருவரிடமிருந்து முற்போந்த 6 மாதகாலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு (கட்டாய விற்பனைப் பெறுமதி) 80 சதவீதம்.

(ஈ) விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட தொகுதிக்கடன்கள் - பிந்திய சந்தை விலையில் 90 சதவீதம்

(உ) உத்தரவாதங்கள்

(i) உரிமம்பெற்ற வங்கிகள் - உள்நாட்டில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டவை.

உத்தரவாதங்களின் தகைமையுடைய பெறுமதி, கீழே தரப்பட்டுள்ளவாறு தகைமையுடைய கொடுகடன் தரமிடல் முகவரொருவரினால் வழங்கப்பட்ட தரமிடலை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது:

| வங்கிகளின் கொடுகடன் தரமிடல் | பிணையின் பெறுமதி |
|---|---|
| AAA இலிருந்து AA- இற்கு அல்லது சமமானது | 80 சதவீதம் |
| A+ இலிருந்து A- இற்கு அல்லது சமமானது | 50 சதவீதம் |

(ii) இலங்கை அரசாங்கத்தின் உத்தரவாதம் - முழுப்பெறுமதி

(ஊ) இலங்கை அரசாங்க பிணையங்கள் - ஏதேனும் உரிமை அல்லது கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டது.

(எ) இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் - ஏதேனும் உரிமை அல்லது கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டது.

(ஏ) BB+ கொண்ட வெளிவாரித் தரமிடலுடன் கூடிய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் அல்லது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றிலுள்ள தவணை வைப்புக்கள் மற்றும் ஏதேனும் உரிமம் அல்லது கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டது.

(ஐ) அசையாச் சொத்துக்கள் தொடர்பான முதன்மை ஈடு

(i) அசையாச் சொத்தின் மதிப்பீடு, 2018ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரை - அசையாச் சொத்துக்களின் மதிப்பீடு அல்லது திருத்தப்பட்டவாறானவற்றிற்கு இணங்கியொழுகுவதாக இருத்தல் வேண்டும்.

(ii) பிணையத்தின் பெறுமதி அசையாச் சொத்தின் கட்டாய விற்பனைப் பெறுமதி மீதான படிப்படியாக அதிகரிக்கின்ற கழிவிடலையும் எடுத்துக்காட்டப்பட்ட பணிப்புரையின் படியான தற்போதைய மதிப்பீட்டினையும் அடிப்படையாகக் கொண்டது.

(iii) படிப்படியாக அதிகரிக்கின்ற கழிவிடல் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.

| விடயம் | பிணைப் பெறுமதியாகக் கருதப்படக்கூடிய அசையாச் சொத்தின் கட்டாய விற்பனைப் பெறுமதியின் சதவீதம் |
|---|---|
| செயற்படாக் கடனான முதல் தடவையில் வகைப்படுத்தப்பட்ட கொடுகடன் | 75 |
| **இழப்பு வகையிலுள்ள காலம்** | |
| 12 மாதங்களுக்கும் குறைவானவை | 65 |
| 12 மாதங்களுக்குக் கூடுதலாக ஆனால் 24 மாதங்களுக்கும் குறைவானவை | 60 |
| 24 மாதங்களுக்குக் கூடுதலாக ஆனால் 36 மாதங்களுக்கும் குறைவானவை | 50 |
| 36 மாதங்களுக்குக் கூடுதலாக ஆனால் 48 மாதங்களுக்கும் குறைவானவை | 40 |
| 48 மாதங்களுக்கும் கூடுதலானவை | சொத்து கிரமமான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் சபை ஒப்புதலளித்த கொள்கையின் அடிப்படையில் மேலும் கழிவிடப்படுதல் வேண்டும். |

(ஒ) முதன்மை ஈடுகள் தவிர்ந்த ஈடுகள்

அசையாச் சொத்துக்கள் தொடர்பான முதன்மை ஈடுகள் தவிர்ந்த ஈடுகள், பிரிவுகள் (i) மற்றும் (ii) இலுள்ள நிலைமைகளுக்கு இணங்கியொழுகுவதற்கு உட்பட்டு, அத்தகைய சொத்துக்கள் அதே உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளுக்கு ஈடு வைக்கப்பட்டிருப்பின் மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காக தகைமைபெறக்கூடியதாக இருக்கும். வரவேண்டிய நிலுவைத் தொகையினை அறவிடுவதற்காக விற்பனை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் ஆதனம் வெறிதான நிலையில் கையளிக்கப்பட வேண்டும் என்ற உடன்படிக்கையில்லாமல் பிணையுறுதியாக வதிவிட சொத்தொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்குமிடத்து அத்தகைய சொத்தின் பெறுமதி கருத்தில் கொள்ளப்படக்கூடாது.

6. **உள்ளகக் கணக்காய்வின் வகிபாகம்**

6.1 உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் கொடுகடன் இடர்நேர்வு மதிப்பீடு, அளவிடல் முறைமைசார் மற்றும் செயன்முறை என்பனவற்றின் காத்திரமான தன்மையினை சுயாதீனமாக மதிப்பிடல் வேண்டும் என்பதுடன் கொடுகடனின் நியாயபூர்வமான தன்மை ஏற்றுக்கொள்ளப்படுவதனையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

6.2 உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடுகள் அனைத்து கொடுகடன் இடர்நேர்வு மதிப்பிடல் மாதிரிகளையும் உள்ளீடுகளையும் அனுமானங்களுக்காக பயன்படுத்தப்பட்டவற்றையும் மதிப்பிடுதல் வேண்டும்.

6.3 முக்கியமான தூண்டுநர்கள் அவதானத்திலெடுக்கப்பட்டு துல்லியமான முறையில் பயன்படுத்தப்பட்டமையினை உறுதிப்படுத்தும் பொருட்டு உள்ளகக் கணக்காய்வுத் தொழிற்பாடு பின்புலப் பரீட்சிப்பின் போதுமான தன்மை மற்றும் காத்திரமான தன்மை என்பன தொடர்பில் உத்தரவாதத்தினை வழங்குதல் வேண்டும்.

7. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் 2021.06.30 இல் முடிவடைகின்ற காலாண்டு தொடக்கம் ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்ததன் பின்னர் 30 நாட்களுக்குள் dsnbfi@cbsl.lk இனூடாக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு கீழேயுள்ள அட்டவணை 1 மற்றும் 2 இல் காட்டப்பட்டுள்ள தகவல்களை அறிக்கையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

**அட்டவணை 1 - தவணைதவறும் நிகழ்தகவு மற்றும் இழப்புக்களைத் தருகின்ற தவணைதவறுதல்கள்**

**.................. இல் உள்ளவாறு ஒன்றுசேர்ந்த பெறுமதி இழத்தல்**

| வியாபாரப் பிரிவு/ உற்பத்தி/ வகை அல்லது வேறு ஏதேனும் அடிப்படை | தவணை தவறும் நிகழ்தகவு | | | இழப்புக்களைத் தருகின்ற தவணை தவறுதல்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | கட்டம் 1 | கட்டம் 2 | கட்டம் 3 | கட்டம் 1 | கட்டம் 2 | கட்டம் 3 |
| | | | | | | |
| | | | | | | |

**அட்டவணை 2 - .................... இல் முடிவடையும் காலாண்டிற்கான எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களைக் கணிப்பதற்காக கொடுகடன் வசதிகளை/ வெளிப்படுத்துகைகளைத் தரமுயர்த்தல்**

| | |
|---|---|
| **தரமுயர்த்தப்பட்ட வசதிகளின் எண்ணிக்கை**<br>கட்டம் 2இலிருந்து கட்டம் 1இற்கு<br>கட்டம் 3இலிருந்து கட்டம் 1இற்கு<br>கட்டம் 3இலிருந்து கட்டம் 2இற்கு | |
| **தரமுயர்த்தப்பட்ட மொத்த வசதிகளின் பெறுமதி**<br>கட்டம் 2இலிருந்து கட்டம் 1இற்கு (ரூ.மில்)<br>கட்டம் 3இலிருந்து கட்டம் 1இற்கு (ரூ.மில்)<br>கட்டம் 3இலிருந்து கட்டம் 2இற்கு (ரூ.மில்) | |
| **கட்டம் 2 மற்றும் 1இற்கு தரமுயர்த்தப்பட்டமை மீதான வருமானக் கூற்றிற்கு மீள அங்கீகரிக்கப்பட்ட வட்டி வருமானத்தின் மொத்தம் (ரூ.மில்.)** | |